சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No.26/2022

| | |
|---|---|
| பெயர் | : தர்மலிங்கம்(பி.சா.1) |
| தகப்பனார் பெயர் | : மகாலிங்கம் |
| கணவர் பெயர் | : |
| வயது | :41 |
| கிராமம் | : மேலூர் |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :மண்டல துணை வட்டாட்சியர் மேலூர் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

11.03.2025

பி.வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு ஆதரவாக வட்டாட்சியர் சார்பாக என்னுடைய அங்கீகார கடிதத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ பதிவேட்டு நகல் பி.சா.ஆ.2. சர்வே எண்.8/2A, 2Cக்கான சிட்டா பி.சா.ஆ.3. அ பதிவேடு நகல் பி.சா.ஆ.4. புல எல்லை வரைபடம் பி.சா.ஆ.5. சுற்றறிக்கை பி.சா.ஆ.6. 10.04.2012 தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியர் மதுரை பிறப்பித்துள்ள கடிதம் பி.சா.ஆ.7. 11.05.2012 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்டுள்ள கடிதம் பி.சா.ஆ.8. 15.05.2012 அன்று வட்டாட்சியர்

மேலூர் அவர்கள் கொடுத்துள்ள கடிதம் பி.சா.ஆ.9. 06.07.2012 அன்று பஞ்சமர் நிலம் குறித்து கொடுக்கப்பட்டுள்ள குறிப்பாணை பி.சா.ஆ.10. மேலூர் வட்டத்தில் உள்ள பஞ்சமர் நிலம் குறித்த பட்டியல் பி.சா.ஆ.11. அரசாணை எண் 296/1954 நகல் பி.சா.ஆ.12. அரசாணை எண் 12 ஆதிதிராவிடர் நலத்துறை பி.சா.ஆ.13. (பி.சா.ஆ6, 7, 8, 9 ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) (குறுக்கு விசாரணை வேறுதேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.03.11 19:06:14 +0530

Sub Judge

Melur